# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2356/24 – 2023 නොවැම්බර් මස 02 වැනි බ්‍රහස්පතින්දා – 2023.11.02

*2356/24 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

*38 ஆம் பிரிவு (அ) வின் கீழான கட்டளை*

***2023 ஆம் ஆண்டின் 226 ஆம் இலக்கக் கட்டளை***

எனது குறிப்பு இல. : L/03J/95/FR/173.
பி. செ. குறிப்பு இல. : උදු/2/2/10/38.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவு (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த II ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் இருப்பாட்சியை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.*

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
*''மிஹிகத்த மெதுர''*,
காணிச் செயலகம்,
இல.*1200/6*, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
*2023, ஒற்றோபர் 10.*

**அட்டவணை**

I. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், உடதும்பர.

II. **காணியின் விபரம்** : மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் உடதும்பர பிரதேச செயலாளர் பிரிவில் கங்தெக கோறளே சிறு பிரிவில் கரம்பகெட்டிய (896) கிராம அலுவலர் பிரிவில் மீமுரே கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.01.12 ஆந் திகதிய மஹ 6865 ஆரம்ப வரைபடத்தில் பின்வரும் காணித்துண்டுகளின் எல்லைகள் :

01. **துண்டு இல.1 – வின்ச்பீல்ட்பார்க் வத்தை – விஸ்தீரணம்: 13.0398 ஹெக்டயார்**
வடக்கு: மஹா ஓயா மற்றும் உரிமையாளர் தெரியாத வின்ச்பீல்ட்பார்க் வத்தை ; கிழக்கு: உரிமையாளர் தெரியாத வின்ச்பீல்ட்பார்க் வத்தை ; தெற்கு: அரசு உரிமைகோரும் வின்ச்பீல்ட்பார்க் வத்தை ; மேற்கு: அரசு உரிமைகோரும் வின்ச்பீல்ட்பார்க் வத்தை.

02. **துண்டு இல. 2 – வின்ச்பீல்ட்பார்க் வத்தை – விஸ்தீரணம்: 1.0692 ஹெக்டயார்**
வடக்கு: உரிமையாளர் தெரியாத வின்ச்பீல்ட்பார்க் வத்தை மற்றும் ஓயா ; கிழக்கு: ஓயா மற்றும் மஹா ஓயா ; தெற்கு: மஹா ஓயா ; மேற்கு: உரிமையாளர் தெரியாத வின்ச்பீல்ட்பார்க் வத்தை.


1A – G 40652 – 29 (2023/11)



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**03. துண்டு இல. 3 – வின்ச்பீல்ட்பார்க்வத்தை – விஸ்தீரணம்:** 0.1770 **ஹெக்டயார்**

வடக்கு: மஹா ஓயா ; கிழக்கு: மஹா ஓயா ; தெற்கு: மஹா ஓயா ; மேற்கு: மஹா ஓயா.

EOG 11 - 0014

---

***காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

*38 ஆம் பிரிவு (அ) வின் கீழான கட்டளை*

***2023 ஆம் ஆண்டின் 225 ஆம் இலக்கக் கட்டளை***

எனது குறிப்பு இல. : 4-3/4/2015/LO/183.
பி. செ. குறிப்பு இல. : 3/7/16/6.

*காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவு (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த II ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் இருப்பாட்சியை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

*ஹரின் பெர்னாண்டோ,*
*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.*

*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,*
*''மிஹிகத்த மெதுர'',*
*காணிச் செயலகம்,*
*இல.1200/6, ரஜமல்வத்தை வீதி,*
*பத்தரமுல்லை,*
*2023, ஒற்றோபர் 10.*

***அட்டவணை***

I. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், வலபனே, நில்தண்டாஹின்ன.

II. **காணியின் விபரம்** : மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் வலபனே பிரதேச செயலாளர் பிரிவில் யட்டிபலாத கோறளே சிறு பிரிவில் இல. 523-B, வெவதென்ன கிராம அலுவலர் பிரிவில் அம்பன்எல்ல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2018.11.28 ஆந் திகதி இ.கி.வ. 266, பிற்சேர்க்கை இல. 8, தாள் இல 8, இறுதி கிராம வரைபடத்தில் பின்வரும் காணித்துண்டுகளின் எல்லைகள் :

**01. துண்டு இல.562 – வெவதென்ன – விஸ்தீரணம்:** 0.1074 **ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 561 மற்றும் 496 ; கிழக்கு: துண்டு இல. 496 ; தெற்கு: துண்டு இல. 496 மற்றும் 510 ; மேற்கு: துண்டு இல. 510, 499 மற்றும் 561.

EOG 11 - 0015

***காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

*38 ஆம் பிரிவு (அ) வின் கீழான கட்டளை*

***2023 ஆம் ஆண்டின் 229 ஆம் இலக்கக் கட்டளை***

எனது குறிப்பு இல. : 4-3/2/2016/PT/149.
பி. செ. குறிப்பு இல. : DIVUD/LND/LND/ACQUI/L5/5/WPO.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவு (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த II ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் இருப்பாட்சியை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.*

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
*''மிஹிகத்த மெதுர'',*
காணிச் செயலகம்,
இல.1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
*2023, ஒற்றோபர் 10.*

***அட்டவணை***

I. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், உடுபத்தாவ.

II. **காணியின் விபரம்** : வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் உடுபத்தாவ பிரதேச செயலாளர் பிரிவில் இல. 1519, கும்புக்கஹமுல்ல கிராம அலுவலர் பிரிவில் கும்புக்கஹமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.12.06 ஆந் திகதிய இ.கி.வ. 1010 ஆம் இலக்க வரைபடத்தில் பின்வரும் காணித்துண்டின் எல்லைகள் :

**01. துண்டு இல. 98 – கும்புக்கஹமுல்ல எஸ்டேட், கந்தெவத்தை – விஸ்தீரணம்:** 0.0253 **ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 2 மற்றும் இ.கி.வ 2053 ; கிழக்கு: இ.கி.வ. 2053 மற்றும் துண்டு இல. 2 ; தெற்கு: துண்டு இல. 2 ; மேற்கு: துண்டு இல. 2.

EOG 11 - 0016

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*